# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR

| | | |
|---|---|---|
| CC | : | 33/ 2025 |
| Deposition of Witness for | : | PW.2 (LW- 3 ) |
| Name | : | கணேசன் |
| Father’s Name | : | ராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர். |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 25th day of February 2026.**

**முதல் விசாரணை :–**

நான் சாலப்பாளையத்தில் வசிக்கின்றேன். விவசாயம் செய்கின்றேன். குப்புசாமி என்பவரை தெரியும். அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். 04.06.2024–ம் தேதி நானும், குப்புசாமி என்பவரும் கரூருக்கு வந்துவிட்டு மீண்டும் சாலப்பாளையம் நோக்கி குப்புசாமி என்பவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அதை நான்தான் ஓட்டி சென்றேன். குப்புசாமி என்பவர் பின்னால் அமர்ந்து வந்தார். பகல் சுமார் 11.30 மணியளவில் கரூர் – கோவை நெடுஞ்சாலையில் வேப்பம்பாளையம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது எங்கள் வாகனத்திற்கு முன்பாக சுப்பிரமணி என்பவரும், அவரது மகன் சந்தோஷ்ராஜ் என்பவரும் எங்களுக்கு முன்பாக சென்று கொண்டிருந்தார்கள். அப்போது எங்களுக்கு பின்னால் வந்த அரசுபேருந்து எங்களை முந்திக்கொண்டு சென்று முன்னால் சென்றுகொண்டிருந்த இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. பேருந்து அதிவேகமாக வந்து மோதியது. பேருந்தை ஓட்டிய நபர் ஆஜர் எதிரிதான். இரு சக்கர வாகனத்தில் சென்ற இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. சுப்பிரமணி என்பவரை ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சந்தோஷ்ராஜ் என்பவரை நாச்சிமுத்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். குப்புசாமி என்பவர் சுப்பிரமணியின் மனைவி நவலட்சுமி

என்பவருக்கு சம்பவம் குறித்து தகவல் தெரிவித்தார். பின்னிட்டு சுப்பிரமணி என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன். இது சம்பந்தமாக கரூர் நகர காவல்நிலையத்தில் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

சம்பவம் குறித்து நான் புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண். TN 45 N 3890 ஆகும். அந்த வாகனம் எந்த ஊருக்கு சென்றுகொண்டிருந்தது என்று தெரியாது. இழப்பீடு கோரி சுப்பிரமணியின் மனைவி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியும். நானும், சுப்பிரமணி என்பவரும் ஒரே ஊர் மற்றும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். எத்தனை கையொப்பம் செய்தேன் என்று நினைவில்லை.

சம்பவம் நடைபெற்றவுடன் சாலையில் வைத்து பேருந்தின் ஓட்டுநரான ஆஜர் எதிரியை பார்த்தேன். எதிரி ஓட்டி வந்த வாகனம் அரசு பேருந்து ஆகும். நாங்கள் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனத்தை கடந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில்தான் பேருந்தின் ஓட்டுநரை பார்த்தேன். அதற்கு முன்பு பார்த்ததில்லை. பேருந்து எங்களை கடந்து வேகமாக சென்று மோதியவுடன் தான் தெரிந்தது. வேகமாக மோதிய வாகனத்தில் யார் டிரைவர் சீட்டில் இருந்தார்கள் என்று தெரியாது என்றால் தமிழ்மணி என்பவர்தான் ஓட்டினார் என்று சொன்னார்கள். அவர்தான் ஓட்டினார் என்று நேரடியாக தெரியாது.

அரசு பேருந்தில் எத்தனை ஓட்டுநர் மற்றும் நடத்துனர் இருந்தார்கள் என்றும், அவர்கள் என்ன மாதிரியான உடைகள் அணிந்திருந்தார்கள் என்றும் தெரியாது. தமிழ்மணி என்பவர் வாகனத்தை ஓட்டினார் என்று என்னிடம் சொன்ன நபரின் விவரம் தெரியாது. இறந்த நபர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். எனக்கு இந்த வழக்கு விவரங்கள் அனைத்தும் சுப்பிரமணி குடும்பத்தார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். சாட்சியம் சொல்வதற்கும் அவர்கள்தான் அழைத்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை விபத்து சமயத்தில் நான் பார்க்கவில்லை என்பதலிருந்து நான் எதிரியை அடையாளம் காட்டியது தவறு என்றால் சரியல்ல. யாரோ 3–ம் நபர் சொல்லித்தான் எதிரியை அடையாளம் காட்டியது தவறு என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் இந்த விபத்து நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |